| **நடைமுறைசாரா பொறுப்புக்கள்** | | | 2,588,192 | | 2,511,960 |
| செலவுசெய்யப்பட்ட மூலதனக் கொடை | 16 | 14,013,297 | | 11,745,940 | |
| செலவுசெய்யப்படாத மூலதனக் கொடை | 17 | 465,537 | | 2,140,681 | |
| **வரையறுக்கப்பட்ட நிதி** | | 14,478,834 | | | 13,886,621 |
| விசேட நிதி | 18 | 6,491,812 | | 6,054,844 | |
| ஆராய்ச்சி நிதி | 19 | 1,020,796 | | 961,310 | |
| பரிசுகளும் கொடைகளும் | 20 | 12,771,712 | | 10,549,982 | |
| பிற | 21 | 3,231,891 | | 2,324,571 | |
| பணிக்கொடை ஒதுக்குகை | 22 | 6,984,073 | | 4,179,875 | |
| | | | 30,500,284 | | 24,070,583 |
| மொத்த பொறுப்புகள் | | | 47,567,309 | | 40,469,163 |
| தேறிய பொறுப்புக்கள் | | | (6,612,984) | | (6,469,270) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு | | | | | |
| மூலதனப் பெறுகைகள் | | | | | |
| மீள் பெறுமதியிடல் ஒதுக்குகை கணக்கு | | 798,276 | | 798,276. | |
| நிறுவனத்தின் பொது ஒதுக்குகை | 23 | (7,411,260) | (6,612,984) | (7,267,547) | (6,469,270) |
| தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு | | | (6,612,984 | | (6,469,270) |

நிறுவனத்தின் முகாமைத்துவ சபையானது இந்த சபைக்காகவும் அதன் சார்பிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிக்கூற்று பற்றிய பொறுப்பினை வகிக்கின்றது

இந்த நிதிக்கூற்றானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கும் நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கியுள்ளது

(வண.கலாநிதி கொட்டப்பிட்டியே ராகுல தேரோ)
பணிப்பாளர்
பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்

கலாநிதி பி.ஆர் வசந்த பிரியதர்ஷன
முகாமைத்துவ சபையின் உறுப்பினர்
பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்

(திருமதி)ஏ.பி.எஸ்.எம்.தொலகே)
சிரேட்ட உதவி நிதி பொறுப்பாளர்
பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்

பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்
களனி பல்கலைக்கழகம்
2014 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான நிதி நடவடிக்கை பற்றிய கூற்று

| | குறிப்பு | 2014 ரூபா | ரூபா | 2013 ரூபா | ரூபா |
|---|---|---|---|---|---|
| வருமானம் | | | | | |
| மீண்டுவரும் செலவினத்திற்கான அரசாங்கத்தின் கொடை | | 24,150,000 | | 11,417,000 | |
| பிற வருமானம் | | | | | |
| கடன் வட்டி | | 136,078 | | 107,830 | |
| பழைய பொருட்களின் விற்பனை | | - | | - | |
| பல்வேறுபட்ட வருமானங்கள் | 24 | 804,449 | | 611,625 | |
| பதிவுக் கட்டணம் | | 678,500 | | 575,000 | |
| பாடநெறிக் கட்டணம் | | 19,785,908 | | 17,368,279 | |
| பரீட்சைக் கட்டணம் | | 125,000 | | 474,718 | |
| நூலகக் கட்டணம் | | 441,000 | | 529,000 | |
| நூல் விற்பனை | | 7,670 | | 13,087 | |
| நூலகத் தண்டப்பணம் | | 4,665 | | 6,714 | |
| பிற கருத்திட்ட வருமானம் | | 5,655,000 | | 4,119,759 | |
| இலதாக்கல் | 25 | 1,407,787 | | 1,191,704 | |
| பிறதொழிற்பாட்டு வருமானம் | 25 | 1,063,721 | | 1,476,849 | |
| மொத்த வருமானம் | | | 54,259,778 | | 37,891,565 |
| செலவு | | | | | |
| தனிப்பட்ட ஊதியங்கள் - கல்விசார் | 25 | 11,751,294 | | 10,999,449 | |
| தனிப்பட்ட ஊதியங்கள் - கல்விசாரா | 25 | 15,599,966 | | 12,052,342 | |
| பிரயாணச் செலவுகள் | | 162,293 | | 90,469 | |
| வழங்கல்கள் | | 2,466,255 | | 1,986,845 | |
| பராமரிப்பு செலவு | | 1,052,452 | | 789,693 | |
| ஒப்பந்த சேவைகள் | | 13,105,701 | | 7,479,607 | |
| பெறுமானத்தேய்வு மற்றும் இலதாக்கல் செலவு | | 3,356,267 | | 3,047,842 | |
| பிற செலவுகள் | | 7,547,221 | | 4,912,951 | |
| செலவு மொத்தம் | | | 55,041,448 | | 41,359,197 |
| தொழிற்பாட்டு சேமிப்பு/ குறைவு | | | (781,671) | | (3,467,632) |
| நிதிசார் செலவு | | | | | |
| சொத்துக்கள், உபகரணங்கள் விற்பனையின் மூலம் கிடைத்த வருமானம் | | | - | | - |
| உரிய காலத்திற்கான தேறிய சேமிப்பு குறைவு | | | (781,671) | | (3,467,632) |
| சேமிப்பு / (குறைவு) விசேட பொருட்கள் | | | - | | - |
| விசேட பொருட்கள் | | | - | | - |
| காலப்பகுதிக்குள் சேமிப்பு / (குறைவு) | | | (781,671) | | (3,467,632) |

நிறுவனத்தின் முகாமைத்துவ சபையானது இந்த கணக்குகளையும் அதன் சார்பிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிக்கூற்று பற்றிய பொறுப்பினை வகிக்கின்றது

இந்த நிதிக்கூற்றானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கமைய நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கியுள்ளது

(வண.கலாநிதி கொட்டப்பிட்டியே ராகுல தேரோ)
பணிப்பாளர்
பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு
நிறுவனம்

கலாநிதி பி.ஆர் வசந்த பிரியதர்ஷன
முகாமைத்துவ சபையின் உறுப்பினர்
பாளி, பௌத்த கல்வி
பட்டப்பின்படிப்பு நிறுவனம்

(திருமதி)ஏ.பி.எஸ்.எம்.தொலகே)
சிரேட்ட உதவி நிதி பொறுப்பாளர்
பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு
நிறுவனம்

2014 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான நிதி ஓட்டக் கூற்று

| | 2014<br>ரூபா | ரூபா | 2013<br>ரூபா | ரூபா |
|---|---|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் கிடைத்த நிதி ஓட்டம் | | | | |
| வருடத்திற்கான மிகை (குறைவு) | | (781,671) | | (3,467,632) |
| நிதி தழும்பலின்பால் பாதிக்கும் விடயங்கள் சார்பிலான சீராக்கல்கள் | | - | | |
| பணிக்கொடை | | 2,804,198 | | (324,508) |
| பெறுமானத்தேய்வு | | (3,260,130) | | 3,038,341 |
| இலதாக்கல் | | (1,407,787) | | (1,191,704) |
| | | 3,874,870 | | (1,945,502) |
| கடந்த காலப்பகுதிகளுக்கான விடயங்கள் | | - | | - |
| தொழிற்படு மூலதன விடயங்களின் மாற்றங் களுக்கு முன்னைய தொழிற்பாட்டு மிகை | | **(3,874,870)** | | **(1,945,502)** |
| தொழிற்படுமூலதன விடயங்களின் மாற்றங்கள் | | | | |
| களஞ்சிய முற்பணம், ஆராய்ச்சி, வெளியீடு இருப்பு (அதிகரிப்பு / குறைவு) | (2,080) | | (76,206) | |
| பல்வேறுபட்ட கடன்பட்டோர்(அதிகரிப்பு / குறைவு) | 104,014 | | (103,333) | |
| பதவியணியினர் முற்பணம்(அதிகரிப்பு / குறைவு) | (1,326,125) | | (386,165) | |
| சேவை வழங்குகை முற்பணம்(அதிகரிப்பு/குறைவு) | (45,873) | | 46,950 | |
| எதிர்காலக் கொடுப்பனவு(அதிகரிப்பு / குறைவு) | 16,575 | | (788,229) | |
| பிற வைப்புக்கள் (அதிகரிப்பு / குறைவு) | 4,587,500 | | 107,500 | |
| முதலீட்டு வரவேண்டியவைகள் மீதான வட்டி (அதிகரிப்பு / குறைவு) | - | | - | |
| வைப்புகளும் கடனாளிகளும்(அதிகரிப்பு / குறைவு) | (4,000) | | 17,940 | |
| அட்டுறுச் செலவு, பிற பொறுப்புக்கள் (அதிகரிப்பு / குறைவு) | 80,232 | 3,206,374 | 510,851 | 308,304 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலம் கிடைத்த தேறிய பெறுமதி | | **7,081,244** | | **(1,637,198)** |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலம் கிடைத்த நிதி ஓட்டம் | | | | |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | (3,675,143) | | (1,186,582) | |
| பிற முதலீடுகள் | (591,412) | | (842,832) | |
| முதலீட்டு செயற்பாடுகளில் இடப்பட்ட தேறிய நிதி | | (4,266,555) | | (2,029,413) |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதி செயற்பாடுகளின் மூலம் கிடைத்த நிதி ஓட்டம் | | | | |
| மூலதன செலவுகளுக்கான அரசாங்கத்தின் கொடை | 2,000,000 | | 2,550,000 | |
| பரிசுகளும் கொடைகளும் | | | | |
| பிற நிதியங்கள் | 1,403,774 | | 1,253,596 | |
| நிதி செயற்பாடுகளின் மூலம் பிறப்பிக்கப்பட்ட நிதி | | 3,403,774 | | 3,803,596 |
| பணம் மற்றும் பணம் சார்ந்த விடயங்களின் தேறிய அதிகரிப்பு | | 6,218,463 | | 136,984 |
| வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் பணம் சார்ந்தவை தொடர்பிலான நிலுவை | | 6,614,438 | | 6,477,454 |
| வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் பணம் சார்ந்தவை விடயங்களின் நிலுவை (குறிப்பு 1) | | 12,832,901 | | 6,614,438 |
| | | | | |
| குறிப்பு 1 | | 2014 ரூ. | | 2014 ரூ. |
| வங்கி நிலுவை | | 12,832,901 | | 6,614,438 |
| பிற வங்கி நிலுவை | | - | | - |
| | | 12,832,901 | | 6,614,438 |

பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்
களனி பல்கலைக்கழகம்
2014 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான தேறிய சொத்துக்களின் தழும்பல்

| | பொது சேர்மம் | மீள் மதிப்பிடல் | மொத்தம் |
|---|---|---|---|
| 2012-01-01 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | **(1,089,945)** | **798,276** | **(291,669)** |
| 2012 ஆம் ஆண்டில் மிகை / (குறைவு) | (2,709,969) | - | (2,709,969) |
| 2013-01-01 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | **(3,799,915)** | **798,276** | **(3,001,638)** |
| 2013 ஆம் ஆண்டில் மிகை / (குறைவு) | (3,647,632) | - | (3,467,632) |
| 2014-01-01 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | **(7,267,547)** | **798,276** | **(6,469,270)** |
| நன்கொடை விடயங்களின் பெறுமதி மாற்றம் | **637,957** | - | (637,957 |
| 2014 ஆம் ஆண்டில் மிகை / (குறைவு) | (781,671) | - | (781,671) |
| 2014-12-31 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | (7,411,260) | 798,276 | (6,612,984) |

கணக்கிடல் கொள்கையும் குறிப்புகளும்

## 01. கணக்கிடல் மூலதர்மங்கள்

### 1.1 பொது கொள்கைகள்

1.1.1 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கு அமைவாக 1979 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பாளி, பௌத்த பட்டப்பின் படிப்பு சட்டத்தின் கீழ் களனி பல்கலைக்கழகத்தின் துணை நிறுவனமாக பாளி, பௌத்த பட்டப்பின் படிப்பு நிறுவனமானது தாபிக்கப்பட்டுள்ளது.

**1.1.2 பிரதான நோக்கங்களும் செயற்பாடுகளின் தன்மையும்**

பாளி, பௌத்த துறைகள் தொடர்பில் பட்டப்பின் படிப்பு நிலையிலான கற்பித்தல், பயிற்சியளித்தல், ஆராய்ச்சி செய்தல் போன்ற பணிகளைத் திட்டமிடுதலும் அது சம்பந்தமான பட்டப்பின் படிப்புப் பட்டத்தையும் டிப்ளோமாவையும் வழங்குவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 02. இசைவாக்கக் கூற்று

நிதிநிலைமை பற்றிய கூற்று, நிதி செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றம் பற்றிய கூற்று, நிதி ஓட்டக் கூற்று மற்றும் கணக்கிடல் குறிப்புகள் முதலியனவற்றை நிதிக் கூற்றானது கொண்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2011 ஆம் இலக்கமுடைய நிதி சுற்றறிக்கையின் மூலம் தொடர்புபடுத்தப்பட்ட இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள அரசாங்கத்துறை சார்ந்த கணக்கிடல் தரங்களுக்கு அமைவாக மேற்போந்த கணக்குக் கூற்றானது தயாரிக்கப்பட்டுள்ளது.

## 03. நிலையான சொத்துக்களும் மீள் மதிப்பிடலும்

### 3.1 சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள்

3.1.1 சொத்துக்களை இனங்காணுதலும் மதிப்பிடலும்

சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் முதலியவற்றின் செலவிலிருந்து திறந்த பெறுமானத் தேய்வினைக் குறைத்துக் கொண்டு தேறிய பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பவற்றுக்கான செலவுகள் என்னும் போது எதிர்பார்க்கப்படும் பாவனைக்கு தேவையானவாறு தயாரித்துக் கொள்வதற்கு நேரடியாக ஏற்கவேண்டி நேரிடுகின்ற இடைநேர் விளைவாக செலவுகள் அடங்கலாக கொள்வனவு செய்யும் செலவாகும்.

3.1.2 பெறுமானத் தேய்வுக்கான ஒதுக்கங்கள்

இலகுவான வழிமுறையொன்றின் மீது பின்வரும் நடைமுறைச்சொத்துக்களின் பெறுமானத் தேய்வுகள் செய்யப்பட்டுள்ளன

102 - தளபாடங்களும் பொருத்துகைகளும் 10%

102 - அலுவலக தளபாடங்களும் உபகரணங்களும் 20%

102 - ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் 20%

102 - நூலகப் புத்தகங்களும் பருவகால சஞ்சிகைகளும் 20%

102 - மோட்டார் வாகனங்கள் 20%

3.2 இருப்பு

செலவினை அடிப்படையாகக் கொண்டு FIFO முறைக்கு கணக்கிடப்பட்டுள்ளது.

3.3 கடன்பட்டோர்

கடன்பட்டோராகக் குறிப்பிடப்பட்டுள்ளது பதவியினருக்கு செலுத்தப்படும் முற்பணமாகும். இந்த கடன் மற்றும் முற்பணம் பல்கலைக்கழகங்களின் ஊழியர் சேமலாப நிதியத்தின் நிலுவையை பிணையாக வைத்து வழங்கப்படுகின்றமையினால் மீள அறவிடும் அவதானம் இல்லை. இதற்கமைவாக, ஐயக்கடன் இழிந்தகடன் போன்றவற்றிற்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை.

04. **பொறுப்புக்கள்**

4.1 ஓய்வூதிய பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு அமைவாக தகைமை பெற்ற ஊழியர்கள் சார்பில் கணக்கிடல் செய்யப்பட்டுள்ளது.

## 2010 - 2014 வரை நிறுவனத்தின் நிதி நிலமை

| வருடம் | அரசாங்க உதவி மீண்டுவரும் | 102- அரசாங்க உதவி மூலதனம் | தகவல் தொழினுட்பத்திற்கான அரசாங்கத்தின் உதவி | நிறுவனத்தின் ஈட்டுகை | மொத்த மீண்டுவரும் வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | மீண்டுவரும் நிதி பணிகளின் பெறுபேறு |
|---|---|---|---|---|---|---|---|
| 2010 | 7,900,000 | 400,000 | - | 28,878,711 | 28,878,711 | 25,070,959 | 3,807,753 |
| 2011 | 7,314,146 | 750,000 | - | 29,121,279 | 29,121,279 | 28,440,621 | 680,658 |
| 2012 | 6,500,000 | 1,600,000 | - | 25,864,163 | 32,364,163 | 35,074,132 | -2,709,969 |
| 2013 | 11,417,000 | 2,550,000 | - | 26,474,565 | 37,891,565 | 41,359,197 | -3,467,632 |
| 2014 | 24,150,000 | 2,000,000 | - | 27,638,270 | 54,259,778 | 55,041,448 | (781,671) |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

**AUDITOR GENERAL'S DEPARTMENT**


මගේ අංකය / எனது இல. / My No. : ඊඩී/ඊ/පීබීපීජීඅයි/1/14/70

ඔබේ අංකය / உமது இல. / Your No :

දිනය / திகதி / Date : 2016 [illegible]

අධ්‍යක්ෂ,

පාලි හා බෞද්ධ අධ්‍යයන පශ්චාත් උපාධි ආයතනය.

**කැලණිය විශ්වවිද්‍යාලයට අනුබද්ධිත පාලි හා බෞද්ධ අධ්‍යයන පශ්චාත් උපාධි ආයතනයේ 2014 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1978 අංක 16 දරන විශ්වවිද්‍යාල පනතේ 108 (1) උපවගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව.**

---

මාගේ සමාංක හා 2015 ඔක්තෝබර් 07 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඒ.එම්.ඩී.නයනකාන්ත

අතිරේක විගණකාධිපති

විගණකාධිපති වෙනුවට

පිටපත් :-

1. ලේකම් - උසස් අධ්‍යාපන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
2. ලේකම් - මුදල් අමාත්‍යාංශය
3. සභාපති - විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
4. උපකුලපති - කැළණිය විශ්වවිද්‍යාලය




අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. } ஈசி/என்/பீஜேபீபீஎஸ்/1/14/70    ඔබේ අංකය / உமது இல. / Your No }    දිනය / திகதி / Date } 2015 ஒக்தோபர் 07

பணிப்பாளர்,

பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகம்.

களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்ட 1979 இன் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் ஏற்பாடுகளின் 23 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) உப பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று 2015 ஆகஸ்ட் 11 ஆம் திகதி நிறுவகத்தின் பணிப்பாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தால் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நன்கொடைகள் மற்றும் மானியங்கள் என்பனவற்றின் கீழ் கிடைக்கப்பெற்ற ரூபா 12,771,712 கிரயத்திலான சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது காலக்கழிவு செய்யப்பட்டிருக்க வில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 591,412 ஆன முதலீட்டு வட்டி ஆண்டின் வருமானமொன்றாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மிகை ஒதுக்கீடு ரூபா 53,906 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையற்ற விதத்தில் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்விலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூற்றில் இருப்பின் பெறுமதி ரூபா 1,069,652 ஆக இருந்ததுடன், களஞ்சிய இருப்பு பதிவேட்டின் படி அதன் பெறுமதி ரூபா 951,405 ஆக இருந்தமையால் ரூபா 118,247 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்டிருந்த பட்டோலையின் பிரகாரம் நூலகப் புத்தகங்கள், நன்கொடைகள் மற்றும் கொள்வனவு அளவுகளில் ரூபா 641,724 ஆக இருந்ததுடன், நூலகக்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையுடன் ஒப்பிட்ட போது ரூபா 19,853 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டிலிருந்து வைப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 11,075 ஆன தொங்கல் கணக்கு மீதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு பாடநெறியின் மதியுரை சேவைக்காக தீர்க்கப்பட வேண்டிய ரூபா 50,000 தொகை 2015 ஆகஸ்ட் மாதம் வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 1994 ஆம் ஆண்டிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வெவ்வேறு தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த நூலகப் புத்தகங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 30,068 தொகை 2015 யூலை 30 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபனக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வருகை, வெளியேல் மற்றும் விடுமுறை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக குறித்த புத்தகங்கள், ஆவணங்கள் என்பன பேணப்படாமல் மீளாய்வாண்டில் கல்விசார் பதவியணியினருக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 14,738,127 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2000 யூன் 14 ஆந் திகதிய 87(i)ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | மேலதிக நேரப்படிகள் கொடுப்பனவு 20 மணித்தியாலத்திற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டியமையும் அவ் எல்லையை விஞ்சியதற்காக அமைச்சு செயலாளரின் உரிய அதிகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் அதற்கு புறம்பாக ஒவ்வொரு மாதமும் 20 மணித்தியாலத்திற்கு மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மேலதிக நேரப் படிகளாக கொடுப்பனவு செய்யப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (இ) 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | களஞ்சிய வளவுகள் பௌதீக ரீதியாக பரீட்சிக்கும் போது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத கைதவிர்க்க வேண்டிய பொருட்கள் அதிகளவில் களஞ்சியத்தில் காணப்பட்டதன் காரணமாக களஞ்சியத்தில் இடநெரிசல் காணப்பட்டது. முன்னைய கணக்காய்வு |

| | | |
|---|---|---|
| | | அறிக்கைகள் மூலமும் இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2015 யூலை 30 ஆந் திகதி வரையிலும் அப்பொருட்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2011 செப்தம்பர் 15 ஆந் திகதிய PED 58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.4 ஆம் பந்தி | முகாமைத்துவ சபை / கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களுக்காக சமூகமளித்த உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கப்படாத போது அதற்காக நியாயமான அடிப்படையொன்றில் போக்குவரத்து படிகள் செலுத்த முடியுமான போதிலும், இந்நிறுவகத்தினால் எந்தவொரு சுற்றறிக்கையிலும் குறிப்பிடப்படாத வாய்பாடொன்றைப் பயன்படுத்தி வாடகை வண்டிக் கட்டணங்களைவிட உயர்வான போக்குவரத்துக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஊ) | 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்களில் வேலை செய்வதற்காக மாதமொன்றுக்கு 02 நாட்களுக்கு மேற்பட்ட நாட்களுக்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கு தேவைப்பாட்டால் உரிய அமைச்சு செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு புறம்பாக விடுமுறை தின கடமைக்காக படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (எ) 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | அமைச்சரவை, பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரி தீர்மானித்து அங்கீகரிக்கப்பட்ட படிகள் மாத்திரம் முகாமைத்துவ சபை அங்கீகாரத்துடன், கொடுப்பனவு செய்ய முடியுமான போதிலும், அதற்கு முரணாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் 3 மேலதிக செயற்திட்ட பாடநெறிகளுக்காக குறித்த உத்தியோகத்தருக்கு முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் பேரில் மாத்திரம் வெவ்வேறு படிகளாக ரூபா 271,948 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய புத்தக மெய்மையாய்வு 2015 யூலை 30 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 781,671 ஆக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறையானது ரூபா 3,467,632 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 2,685,961 ஆல் குறைவடைந்திருந்தது. கற்கைநெறிகளின் வருமானம் ரூபா 2,417,629 ஆலும் அரச மானியம் ரூபா 12,733,000 ஆலும் அதிகரித்திருந்தமை பற்றாக்குறை குறைவடைந்தமைக்காக விசேடமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கல்விசார் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தால் நடாத்தப்பட்ட ஒரு வருடகால 07 கற்கை நெறிகளில் பௌத்த கற்கை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறி, பாளி கற்கை கலைமானி பட்டப்படிப்பு கற்கை நெறி மற்றும் பௌத்த

ஆயுர்வேத மதிப்புரைக் கற்கை கலைமாணி கற்கைநெறிக்கான மாணவர்களைப் பதிவு செய்தல் மொத்த மாணவர்கள் பதிவில் 17.11 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

(ஆ) மொத்த மாணவர் பதிவுகளுடன் ஒப்பிடும் போது பௌத்த கற்கை கலைமாணி பட்டக் கற்கை நெறிக்கு மாணவர்கள் அதிக பங்களிப்பினை செலுத்தியிருந்தனர். பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (சிங்கப்பூர்) கற்கைநெறிக்காக 08 மாணவர்கள் மாத்திரம் பதிவுசெய்திருந்ததுடன், கலைமாணி பட்டப்படிப்பு கற்கைநெறி (சிங்கப்பூர்) இற்காக ஒரு மாணவரேனும் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் மொத்தமாக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 450 ஆக இருந்த போதிலும், அதில் பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 371 மாத்திரமாக இருந்ததுடன், அதில் 307 மாணவர்கள் மாத்திரம் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர்.

(ஈ) நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற ஒரு வருட கற்கை நெறிகளுக்கு மேலதிகமாக பௌத்த கல்வியில் தத்துவமாணி பட்டம் (M.Phill) மற்றும் பௌத்த கல்வியில் முதுமாணி (Ph.D) யைப் பின்பற்றும் மொத்தம் 237 மாணவர்களில் மீளாய்வாண்டின் போது பட்டப்படிப்பினை பூர்த்தி செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 08 ஆக இருந்தது.

(உ) English Through Buddhism பாடநெறிக்காக பதிவுசெய்யப்பட்ட 104 மொத்த மாணவர் எண்ணிக்கையில் 71 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்ததுடன், அதில் 32 மாத்திரம் சித்தியடைந்திருந்ததுடன், பரீட்சைக்கு விண்ணப்பிக்காத மாணவர்களின் எண்ணிக்கை 33 ஆக இருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 36 ஆண்டு காலமாக நிறுவகம் வாடகை கட்டிடத்தினுள் நடாத்தப்பட்டு வருவதுடன், 2014 பெப்ரவரி தொடக்கம் வருடாந்தம் ரூபா 9,174,999 தொகைக்குப் புதிய கட்டிடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. காணியொன்றை பெற்றுக்கொண்டு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2014 யூன் மாதம் நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவு தேசிய திட்டமிடல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால்

திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் காணியொன்றை கையேற்று கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் 2015 யூலை வரை சாத்தியப்படவில்லை.

(ஆ) புலமைப்பரிசில்களை வழங்குவதற்காகக் கிடைத்திருந்த ரூபா 760,488 பெறுமதியான வெளிநாட்டு நிதியக் கணக்கின் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பல ஆண்டுகளாக உரிய செயற்பாட்டை நிறைவு செய்வதற்காக பயன்படுத்தப்படவில்லை.

### 4.3 பதவியணியினர் நிருவாகம்

2012 திசெம்பர் மாதம் முதல் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்படும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பதவிக்காக பதில் கடமை புரிதல் அடிப்படையில் செயற்படுத்தப்படடு வருவதுடன் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியில் காணப்படும் 09 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயலநடவடிக்கைத் திட்டம்

நிறுவகத்தால் 2014 ஆம் ஆண்டிற்காக அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 10 நோக்கங்களுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அந்நோக்கத்திலிருந்து 04 மாத்திரம் ஆண்டினுள் முழுமையாக பூர்த்தி செய்துகொள்வதற்கு முடியுமாக இருந்தது. 05 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு வருவதுடன் ஒரு செயற்பாட்டை ஆண்டினுள் செயற்படுத்த முடியாமல் இருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களை ஒப்பீடு செய்த போது முறையே 51 சதவீதத்திலிருந்து 72 சதவீதம் வரையிலும் 51 சதவீதத்திலிருந்து 1718 சதவீதம் வரையிலுமான பொருண்மையான விலகல் காணப்பட்டதுடன், இதன் பிரகாரம் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

2015.12.10

கணக்காய்வாளர் அதிபதி (பதில்),
கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்
இல.306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

ஐயா,

**களனி பல்கலைக்கத்தின் துணை நிறுவனமான பாளி, பௌத்த கல்வி பட்டபின் படிப்பு நிறுவனத்தின் 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று தொடர்பில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.**

மேற்போந்த விடயம் சம்பந்தமாக தங்களால் அனுப்பப்பட்டுள்ள 2015-10-07 ஆம் திகதியிடப்பட்டதும் EC/F/PIPBS/1/14/70 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான கடிதத்திற்கு அமைவாக உரிய பதில்களின் வரைவு 2015-12-09 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட 42 ஆவது கணக்காய்வு குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், முகாமைத்துவ சபையின் தழுவு அங்கீகாரத்திற்கு உட்பட்டு, கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

2.2 நிதிக்கூற்று தொடர்பிலான கருத்து

2.2.1 இலங்கை அரசாங்கத்துறையின் கணக்கிடல் தரங்கள்

நிதி கூற்றுக்கு அமைவாக 2014-12-31 ஆம் திகதியன்றுக்கு பரிசு மற்றும் மானிய கணக்கின் நிலுவை 12,771,712/- ரூபாவாகும் . இதில் 2014 ஆம் ஆண்டிற்குரியதாவது 2,859,687/- ரூபா மட்டுமாகும். எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டிற்கான இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது அரசாங்க கணக்கிடல் தரம் 07 இற்கு அமைவாக தேவையான சீராக்கலைச் செய்வதற்கு பதிவு செய்து கொண்டேன்.

2.2.2 கணக்கிடல் குறைபாடுகள்

(அ) கட்டடங்கள், வாகனங்கள் நிதியத்தினதும் ஒப்பந்த மீறுகை நிதியத்தினதும் திட்டவட்டமான நோக்கம் சார்பில் தாபிக்கப்பட்டுள்ளமையினால் இந்த முதலீடுகளிலிருந்து கிடைத்த வட்டி வருமானமும் புறம்பாக உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தும் நோக்கில் பேணப்பட்டு வந்துள்ளது.

இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட 41 ஆவது கணக்காய்வுக் குழுவானது முதலீட்டு வட்டியை வருடத்தின் வருமானத்திற்குள் எடுக்காது உரிய நிதியத்தின் கணக்கிற்கு வரவு வைப்பது பிழையற்றதென சிபாரிசு செய்துள்ளது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு ஒதுக்குகையான 53,906/- ரூபா, நிதி ஓட்ட கூற்று தயாரிக்கப்படும் போது தொழிற்பாட்டு வருமானம் தொழிற்பாட்டு மூலதன மாற்றத்திற்கு முன்னர் கழிக்கப்பட வேண்டுமெனவும், இந்தத் தொகை வருடத்தின் பெறுமானத் தேய்வு செலவிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் நிதி ஓட்ட பெறுமதிக்கு அல்லது தொழிற்பாட்டு வெளிப்படுத்தலுக்கு எவ்வித பாதிப்பும்

நிகழவில்லையென்பதோடு, இது முன்வைத்ததில் காணப்பட்ட மாற்றமொன்று மாத்திரமாகும்.

2.2.3 முரண்பாடான கட்டுப்பாட்டுக் கணக்கு

(அ) இந்தப் பெறுமதிக்கு 2014 ஆம் ஆண்டின் கொடுக்கல் வாங்களின் மீது எவ்வித பாதிப்பும் ஏற்படாததோடு, 2014 ஆம் ஆண்டிற்கான வெளிப்படுத்தல் உரிய முறையில் நிகழ்ந்துள்ளது.

ஆயினும், கையிருப்பின் மாற்றத்திற்கு பின்வரும் விடயங்கள் காரணமாய் அமைந்துள்ளன.

இந்த நிறுவனம் அதன் வெளியீடுகளை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது 1996 ஆம் ஆண்டிலிருந்தாவதோடு, அன்று தொடக்கம் இதுவரை நிறுவனத்திற்கு நிரந்தர கட்டடமொன்று இல்லாமையினால் நிறுவனம் பல்வேறுபட்ட இடங்களுக்கு கொண்டு செல்கையில் நூல்கள் சேதமடைந்தமை, விற்பனைக்காக ஆட்களுக்கு / நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நூல்கள் மீள கிடைக்காமை போன்றவையாகும்.

வெளிப்படுத்தப்பட்ட வெளியீடுகளின் இருப்பிற்கான மாற்றத்திற்கும் அதற்கான காரணங்களும் பற்றி ஆராய்ந்து உரிய அதிகாரிகளுக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது.

(ஆ) உரிய பெறுமதிகளை கணக்கிடும் போது நிகழ்ந்த குறைபாட்டினால் குறித்த மாற்றம் நிகழ்ந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

2.3 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2011 ஆம் ஆண்டில் சேதமடைந்த பொருள் ஏலத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற தொகையிலிருந்து இந்த 11,075/- ரூபாவைக் கொண்ட எதிர்பாரா கணக்கு உள்ளது. இவ்வாறு ஏலத்தில் விடப்பட்ட பொருட்களுக்குரிய தகவல்கள் இல்லாமை காரணமாக உரிய சொத்துக்கணக்கிலிருந்து இந்த வருவாயை நீக்கி உரிய வகையில் இலாபம் / நட்டம் ஒப்பிடுவதற்கு இயலாமற் போயுள்ளது.

(ஆ) இந்த 50,000/- ரூபாவைக் கொண்ட தொகையானது 2010 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களிலிருந்து பௌத்த ஆயுள்வேத மதியுரை பாடநெறி சார்பில் மாணவர்கள் செலுத்திய தொகையாவதோடு, இந்த தொகை மீண்டும் அவர்களுக்கு செலுத்த வேண்டியமையினால் இந்த தொகை திரண்ட கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

இந்த தொகை மீண்டும் அவர்களுக்கு செலுத்துவதா இல்லையா என்பது பற்றி உரிய பிரிவுகளிலிருந்து உசாவுதலைச் செய்ததன் பின்னர் 2015 ஆம் ஆண்டிற்கான கணக்குகளிலிருந்து தேவையான சீராக்கல்களைச் செய்து குறித்து வைத்துக் கொண்டேன்.

(இ) சமர்ப்பித்துள்ள தகவல்கள் சரியானதாகும்.

2.4 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவ தீர்மானங்களுக்கு முரணானமை.

(அ) 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பொது கணக்குகள் குழு பாராளுமன்ற கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் கல்விசார் பதவியணியின் விரிவுரையாளர்களுக்கு வருகை மற்றும் விரிவுரை நடாத்துவது தொடர்பிலான சகல அறிக்கைகளும் பிரத்தியேகமாக நாள் ஏடுகளில் குறித்து வைக்கப்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று ஆராய்ச்சி மாணவர்களுக்கான விரிவுரையாளர்கள் குறித்தொதுக்கியுள்ள தினங்கள், நேரம் அதேபோன்று வழங்கப்பட்ட லீவுக்கான தகவல்கள் என்பனவும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதலால், கல்விசார் பதவியணியின் சேவை கணக்கிடப்படுவது வேறு வழிமுறைகளுக்கு அமைவாகவென்பதை அறியத்தருகின்றேன்.

(ஆ) பட்டப்பின் படிப்பு கல்வியைத் தொடரும் பெரும்பாலான மாணவர்கள் தொழில் அல்லது பல்வேறுபட்ட சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களாகையினால் இந்த நிறுவனத்தின் சகல பாடநெறிகளும் வழமையான வேலை நேரத்திற்குப் புறம்பான விதத்தில் நடாத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயத்தின் காரணமாக ஊழியர்களை மேலதிக வேலைநேரத்தில் ஈடுபடுத்தி பணிகளை நிறைவேற்றிக் கொள்வது கட்டாய விடயமொன்றாவதோடு, இந்த விடயம் சம்பந்தமாக நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் ஆலோசனை பிரகாரம் மேலதிக வேலைநேர எல்லைக்கான அங்கீரத்தை அதிகரித்து பெற்றுக் கொள்வது தொடர்பில் உயர் கல்வி அமைச்சின் செயலாளரிடம் அனுமதி கோரப்பட்டது. இதற்கமைவாக, இந்த அமைச்சின் மூலம் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் "Improving Governance" கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலதிக வேலைநேரம் சம்பந்தமாகவுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக, குறிப்பிடப்பட்டுள்ளவாறு திணைக்களத் தலைவரின் அங்கீகாரத்தின் மீது அத்தியாவசிய ஊழியர்களுக்கு மாத்திரம் மேலதிக வேலைநேரம் அங்கீகரிக்கப்பட்டு உரிய சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(இ) இந்த பொருட்களின் பராதீனப்படுத்தல் தொடர்பிலான பணிகள் மிகத் துரிதமாக ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) 2014-12-31 ஆம் திகதியன்றுக்கு நிரந்தர சொத்துக்கள் அட்டவணை இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, சொத்துகளை வகுப்பீடு செய்தல், இனங்காணுதல், கணக்கிடல் , அவற்றின் கட்டுப்பாட்டினை இலகுபடுத்தும் பொருட்டு நிலையான சொத்துக்கள் ஒவ்வொன்று சார்பிலும் திணைக்கள இலக்கங்களை வழங்கி அவற்றை சொத்துக்களின் மீது ஒட்டும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் பெறுமதிகளை இனங்காண முடியாத சொத்துக்களின் சார்பில் பெறுமதியிடுவதற்காக தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, இந்த பணிகள் பூர்த்தி அடைந்ததுடன் கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்படவுள்ளது. ஆயினும், 2014 ஆம் ஆண்டிலிருந்து நிலையான சொத்துக்கள் அட்டவணையானது கணக்குப் புத்தகங்களுடன் ஒருங்கிணைவாக முன்கொணரப்படும் .

(உ) களனி பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபை மற்றும் பீடசபை போன்றவற்றின் வெளிவாரிப் கொடுப்பனவு அடிப்படையில் உரிய உத்தியோகத்தர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்தல் கட்டாயமாகும் என்னும் அடிப்படையில் இந்த கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளது.

(ஊ) வார இறுதி நாட்களில் மாத்திரம் நடாத்தப்படும் சுய நிதியிடுகை பாடநெறிகளின் சேவைகளை மேற்பார்வை செய்யும் பொருட்டிலான வருகை கொடுப்பனவுகள் உரிய சேவைகள் கட்டாயமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டுமென்னும் அடிப்படையில் பல்கலைக்கழக தகுவிதிகளை பின்பற்றி தயாரித்து முகாமைத்துவ சபையின் அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாட்டின் மீது இவ்வாறு செலுத்தப்பட்டுள்ளது.

(ஏ) பட்டப்பின் படிப்பு நிறுவனங்களின் சுய நிதியிடல் பாடநெறிகளை மேம்படுத்தும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சின் கொள்கையின் மீது இந்த பாடநெறிகளுக்கு உரிய சேவைகளை பெற்றுக் கொள்வதனை ஊக்குவிக்கும் பொருட்டிலான படிகள் உரிய தகுவிதிகளின் மீது கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஐ) ஏடுகள் பரிசோதனைக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1 கற்கை செயலாற்றுகை

(அ) இது பொதுவான நிலைமையொன்றாகும்.

(ஆ) மேற்போந்த அவதானிப்புரை உண்மையாகும். உரிய பாடநெறிக்கான கோரிக்கைகளின் பிரகாரம் மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

(இ) உரிய மாணவர்களுக்கு தனிப்பட்ட காரணங்களின் மீது பரீட்சைக்கு தோற்றுவதற்கு தீர்மானிக்கலாம் என்பதோடு, இந்த மாணவர்களின் தனிப்பட்ட திறமையின் மீது பரீட்சையில் சித்தியடைவது தீர்மானிக்கப்படும் .

(ஈ) பகுதிநேர பாடநெறிகளை கற்கும் வயதுவந்தவர்களில் பெரும்பாலானோர் வெளிநாட்டு மாணவர்களாக உள்ளமையினால் அவர்களுடைய தொழில், தனிப்பட்ட மற்றும் ஆரோக்கிய நிலை என்பவற்றின் மீது இந்த ஆராய்ச்சிப் பட்டத்தின் கால எல்லை பீட

சபையின் அங்கீகாரத்துடன் உரிய மாணவர்களின் தேவைகளையும் ஆலோசகர்களின் சிபாரிசின் படியும் மாற்றமடையலாம் உரிய வருடம் சார்பில் குறிப்பிடப்பட்டுள்ள சித்தியடைந்தோரின் எண்ணிக்கை உயர்வானதென்பதை குறிப்பிடலாம்.

(உ) உண்மையாகும்.

4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) இந்த விடயம் சம்பந்தமாக 2015 வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் குறித்தொதுக்கப்பட்டிருந்த 500 மில்லியன் ரூபாவைக் கொண்டு நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட காணியை சுவீகரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் காணி அமைச்சின் ஊடாக நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதோடு, இந்த நோக்கத்திற்கான நிதி ஏற்பாடுகளை 2016 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு உரிய பிரிவுகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இதுசம்பந்தமாக நிறுவனத்தின் பீடசபையினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள வழிமுறையொன்றுக்கு அமைவாக இந்த புலமை பரிசில்கள் 2014 ஆம் ஆண்டிலிருந்து பட்டம் பெற்ற மாணவர்களுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4.3 **பதவியணி நிருவாகம்**

உண்மையானதாகும்.

சிரேட்ட உதவி பதிவாளர் பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தர் தமக்குரிய கல்வி மற்றும் ஏழு வருட லீவு பெற்றுள்ளமையினால் அவர் மீண்டும் சேவைக்கு சமூகமளிக்கும் வரை இதற்காக நியமிக்கப்பட முடியுமானது பதில் கடமையாற்றும் உத்தியோகத்தரை மாத்திரமாகும். இதற்கமைவாக கணக்காய்வு திகதியன்றுக்கு உரிய பதவி வெற்றிடமாகவிருந்தது 07 மாதங்கள் மாத்திரமாகும்.

இதன் உரிய வெற்றிடமானது 2014 திசெம்பர் 09 ஆம் திகதியின் பின்னர் உரிய நியமன அதிகாரியான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வெற்றிடத்தை நிரப்புவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

5. **கணக்குப்ப பணிகளும் நிருவாகமும்**

5.1 செயற்பாட்டுத் திட்டம்

நிறைவேற்ற முடியாத செயற்பாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது

5.2 வரவுசெலவுத்திட்ட ரீதியிலான கட்டுப்பாடு

வரவுசெலவுத்திட்ட அட்டவணை நிறுவனத்தின் செலவுக் கட்டுப்பாடு சம்பந்தமான விதிகளாக பயன்படுத்தப்படுகின்ற போதிலும் சில தவிர்க்க முடியாத காரணங்களின் மீது மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

உதாரணம் : கல்விசாரா பதவியணிக்கு ஆராய்ச்சிப் படிகள் செலுத்துவதற்கான அறிவுறுத்தல்களுடன் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்தாகும்.

ஆயினும், இது தொடர்பில் முன் அவதானிப்புரைகளுக்கு உட்படுத்தி 2015 ஆம் ஆண்டில் ஆகக்கூடுதலாக நிதி கட்டுப்பாட்டுக் காரணிகளாக வரவுசெலவுத்திட்டத்தை பயன்படுத்துவதற்கு குறித்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்போந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமான தெளிவுபடுத்தல்கள் பற்றி நான் தனிப்பட்ட முறையில் பொறுப்பு சொல்கின்றேன் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

இங்கனம்,

பேராசிரியர் கொட்டபிட்டியே ராகுல தேரர்,
பணிப்பாளர்.

பிரதிகள் : 01. செயலாளர், பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
02. செயலாளர், நிதி அமைச்சு
03. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
04. துணைவேந்தர், களனி பல்கலைக்கழகம்